Deposition of witness
(Chapter XXIII Code of Civil Procedure)
In the Court of Subordinate Judge, Vaniyambadi, Tirupattur District

| | |
|---|---|
| Name | :V. Haribaskar |
| Father's Name | :Vivekanandhan |
| Village | :Vathiyar Kottai |
| Taluk | :Bargur |
| Caste | :BC |
| Calling | :Business |
| Religion | :Hindu |
| Age | :47 |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 26.11.2025.

MCOP.No.72/2022 PW1 Name:ஹரிபாஸ்கர்

**முதல் விசாரணை**

நான் மனுதாரர். என் முதல் விசாரணை சாட்சியத்தினை பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அதனை என் முதல் விசாரணையாக ஏற்றுக்கொள்ள வேண்டுகிறேன். மனுவில் தாக்கல் செய்துள்ள முதல் தகவல் அறிக்கை நகல் ம.சா.ஆ.1 ஆகவும், விபத்து பதிவேட்டு நகல் ம.சா.ஆ.2 ஆகவும், மருத்துவமனை வெளியேற்றுகை குறிப்பு நகல் ம.சா.ஆ.3 ஆகவும், பதிவு சான்று நகல் ம.சா.ஆ.4 ஆகவும், காப்பீட்டு சான்று நகல் ம.சா.ஆ.5 ஆகவும், ஓட்டுநர் உரிமம் நகல் ம.சா.ஆ.6 ஆகவும், ஆதார் அடையாள அட்டை நகல் ம.சா.ஆ.7 ஆகவும், மருத்துவனை பில்கள் ம.சா.ஆ.8 ஆகவும், ஸ்கேன் ரிபோர்ட் ம.சா.ஆ.9 ஆகவும், எக்ஸ்ரேக்கள் ( 2 எண்ணிக்கைகள் )

ம.சா.ஆ.10 ஆகவும், குறியீடு செய்யுமாறு வேண்டுகிறேன். மனுப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

<u>குறுக்கு விசாரணை</u>

விபத்து சமயத்தில் நான் எனக்கு சொந்தமான காரை ஓட்டிக்கொண்டு சென்றேன். அந்த காரில் மொத்தம் 4 நபர்கள் பயணம் செய்தோம். முன்னால் சென்றுக்கொண்டிருந்த லாரியின் பின்பக்கம் மோதி விபத்து ஏற்பட்டது. என் பெயரில் தான் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யபட்டுள்ளது. இறுதிஅறிக்கையும் என்மீது தான் தாக்கல் செய்யபட்டுள்ளது. காரில் என்னுடன் பயணம் செய்த நபர்களுக்கும் காயம் ஏற்பட்டது. அவர்கள் இதே நீதிமன்றத்தில் என்மீது சேர்த்து எம்.சி.ஒப்பி.எண். 70/2022, 73/2022, 74/2022 வழக்குகளை தாக்கல் செய்துள்ளார்கள். விபத்து என்னுடைய அஜாக்கிரதையால் ஏற்பட்ட காரணத்தினால் அந்த வழக்குகளை தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் சரியல்ல. என்னுடைய தொழில் வருமானத்தை காட்டகூடிய ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை. என் பெயரில் தாக்கல் செய்த வழக்கு தவறானது என நான் மேல்நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை. தேசியநெடுஞ்சாலை தான் விபத்து நடந்தது. முன்னால் சென்ற வாகனத்திற்கு போதிய இடைவெளிவிட்டு தான் நான் காரை ஓட்டிசென்றேன். 1, 2 எதிர்மனுதாரர்களுக்கு எதிராக நான் இழப்பீடு எதுவும் சட்டபடியாக எதுவும் பெறமுடியாது என்றால் சரியல்ல. மனு தள்ளுபடி ஆகவேண்டும் என்றால் சரியல்ல.

மேற்படி சாட்சியின் வாக்குமூலம் திறந்த 26/11/2025 இவ்வழக்கரங்கில் என்னால் சொல்ல சொல்ல தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கபட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு கையொப்பம்–கைரேகை செய்யப்பட்டது.

RAJA B

SUBORDINATE JUDGE, VANIYAMBADI
Digitally signed by RAJA B
Location: THIRUPATHUR
Date: 2025.11.26 15:08:16 +0530

சார்பு நீதிபதி
வாணியம்பாடி.